# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை : அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!

www.supeedsam.com | 2020.11.27 வெள்ளிக்கிழமை | Email : supeedsam@gmail.com







# கிழக்கில் சடுதியாக அதிகரித்த கொரோனா தொற்று



## அக்கரைப்பற்றில் 31பேர், இன்றும் அதிகரிக்கலாம்

## மூன்று பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு

## கடைகள், கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளுக்கும் பூட்டு

02>>

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர், மாலைத்தீவு பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருகை



இந்திய அரசின் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் மாலைத்தீவு பாதுகாப்பு அமைச்சர் மரியா திதி ஆகியோர் 02>>

## மட்டக்களப்பில் நீதிமன்ற தடை உத்தரவுக்கு எதிராக தாக்குதல் செய்த வழக்கு நீதிமன்றம் நிராகரிப்பு

(கனகராசா சரவணன்)

கொக்கட்டிச்சோலை பொலிசார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியேந்திரனுக்கு எதிராக எடுக்கப்பட்ட நீதிமன்ற தடை உத்தரவுக்கு எதிராக நீதின்றத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தொடுத்த வழக்கை நேற்று வியாழக்கிழமை (26) மட்டக்களப்பு நீதவான் நீதின்ற நீதவான் 02>>

## சாதாரண தர பரீட்சை தொடர்பில் டிசம்பர் தொடக்கத்தில் தீர்மானம்



நிலைமையை மறுஆய்வு செய்த பின்னர் டிசம்பர் தொடக்கத்தில் சாதாரண தர பரீட்சை குறித்து கல்வி அமைச்சு இறுதி முடிவை எடுக்கும். இந்த காலகட்டத்தில் பாடசாலைகளின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை 02>>

## திருகோணமலையிலும் பொதுமக்கள் கூடுவதற்கு தடை

(எப்.முபாரக்)

திருகோணமலை-சிவன் கோயில் முன் பகுதி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன் சட்டவிரோதமாக பொதுமக்கள் கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையினை திருகோணமலை நீதிமன்றம் வழங்கியுள்ளது. 02>>

## மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை அனுமதிக்காவிட்டாலும் தடை செய்யாமலிருப்பதே நாகரிக நடைமுறையாகும்



### முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைராசசிங்கம்

போரிலே கொல்லப்பட்ட வீரர்கள் அஞ்சலிக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக இருதரப்பினராலும் அங்கீகரிக்கப்படுவதே நாகரிகமடைந்த எல்லா உலக நாடுகளிலும் நடைமுறையாக உள்ளது. இந்த அடிப்படையில் மாவீரர் தினத்துக்கான அஞ்சலி நிகழ்வுகள் 02>>

## பருத்தித்துறை பகுதியில் ஒன்றுகூட தடை

(யாழ் தில்லை)

கொரோனா காரணமாக பருத்தித்துறை நியாயதிக்க எல்லைக்குள் எதிர்வரும் 29ஆம் தகதிவரை பொது இடங்களில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதற்கு பருத்தித்துறை 02>>

## பாடசாலைகளுக்கு 51வீதமான மாணவர்களே வருகை

### கல்வியமைச்சின் செயலாளர்



பாடசாலைகளுக்கு 51வீதமான மாணவர்களும் 82வீதமான ஆசிரியர்களுமே சமுகம் கொடுப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபிலா பெரேரா தெரிவித்தார். வடமேற்கு 03>>



அக்கரைப்பற்றுப் பகுதியில் பி.சி.ஆர் பரிசோதனையில் சுகாதார திணைக்கள ஊழியர்கள் ஈடுபட்ட போது

## நுவரெலியா மாவட்டத்தில் எழுவருக்கு கொரோனா



(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் கினிகத்தேன, மஸ்கெலியா மற்றும் வட்டவளை ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எழுவர் (26.11.2020) 02>>

## ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்ட அமைச்சுக்கள்



பாதுகாப்பு மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் கொண்டு வரப் பட் டுள் ளதாக 03>>






## முல்லைத்தீவு மாவட்டத்தில் கடுமையான பொலிஸ் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகள்

(சண்முகம் தவசீலன்)



வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் இன்றைய தினம் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்ற 03>>

## Z மதிப்பெண்களை நியாயமற்ற முறையில் வழங்குவதற்கான பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வும் இல்லை

### IUSF குற்றச்சாட்டு

இசட் மதிப்பெண்களை நியாயமற்ற முறையில் வழங்குவதற்கான பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வும் இல்லாமல் 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய ஏராளமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் 03>>

# கிழக்கில் சடுதியாக அதிகரித்த கொரோனா தொற்று

**(காரைதீவு நிருபர் சகா, பாறுக் ஷிஹான்)**

கிழக்கில் புதிதாக கொரோனா தொற்றின் ஒரு அங்கமாக அக்கரைப்பற்றுக் கொத்தணியொன்று உருவாகியுள்ளதா? என்று சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. நாட்டில் ஏலவே தோன்றிய மினுவாங்கொட பேலியகொட கொத்தணிகளுக்கு அடுத்ததாக அக்கரைப்பற்று கொத்தணி ஏற்பட்டுள்ளதா என்ற அச்சம் எழுந்துள்ளது. நேற்று(26) அக்கரைப்பற்றில் திடீரென 31பேர்தொற்று இனங்காணப்பட்டதையடுத்து இச்சந்தேகம் எழுந்துள்ளது.

அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை ஆலையடிவேம்பு பிரதேசங்களில் நேற்றுமாலை 6மணிமுதல் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதேவேளை இச்செய்தியறிந்ததும் கடைகள் பாடசாலைகள் இழுத்துமூடப்பட்டன. மக்கள் மனங்களில் அச்சம் பீதி மீண்டும் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளது.

**பாடசாலைகளுக்கு பூட்டு!**

அதேவேளை கல்முனைக்கல்வி மாவட்ட சகல பாடசாலைகளும் இன்று(27)வெள்ளிக்கிழமை முதல் ஒரு வாரகாலத்திற்கு மூடப்பட்டுள்ளது. மீளத்திறக்கும் திகதிபற்றி பின்னர் அறிவிக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் அறிவித்துள்ளார்.

கல்முனைக்கல்வி மாவட்டத்தில் கல்முனை சம்மாந்துறை அக்கரைப்பற்று திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்கள் அடங்குகின்றன. இந்த 4வலயங்களிலும் 252 பாடசாலைகள் உள்ளன. 6139ஆசிரியாகள் பணியாற்றுகின்றனர். 1லட்சத்து 41ஆயிரத்து 68மாணவர்கள் கல்விபயில்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**உடனடி பிசிஆர் பரிசோதனை!**

அக்கரைப்பற்றில் நேற்றுக்காலை 31பேர் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மேலும் நூற்றுக்கணக்கானோருக்கு பிசிஆர் பரிசோனை மேற்கொள்ளப்பட்டது. அக்கரைப்பற்றில் ஏலவே 3பேர் மாத்திரமே கொரோனாத்தொற்றுக்கிலக்காகியிருந்தனர். கல்முனைப்பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தலைமையிலான குழுவினர் களத்தில் நின்று இப்பணியினை மேற்கொண்டுள்ளார். சுகாதாரத்திணைக்களத்தினர் மல்வத்தை இராணுவத்தளபதி பொலிசார் முபபடையினர் உள்ளிட்டோர் களத்தில் நின்று பணியாற்றுகின்றனர்.

அக்கரைப்பற்று பொதுச்சந்தைக்கருகில் இப்பரிசோதனை இடம்பெற்றது. உடனடியாக பிசிஆர் பரிசோதனைக்காக மட்டக்களப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பெறுபேறு கிடைக்கப்பெற்றதும் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரியொருவர் தெரிவித்தார். இதனிடையே கல்முனைப்பிராந்தியத்திலுள்ள 13 சுகாதாரசேவைப்பிரிவுகள் தோறும் ஒலிபெருக்கி அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுவருகின்றன. அக்கரைப்பற்று பகுதிக்கு சென்றுவந்தவர்கள் சுயதனிமைக்குட்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. தேவையில்லாமல் வெளியே யாரும் நடமாடவேண்டாம் கவனமாக இருக்குமாறு கிழக்குமாகாண ஆளுநர் கேட்டுள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் வேகமாக கொரனா தொற்றுபரவியுள்ளதால் எதுவித பாகுபாடுமின்றி சட்டநடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கிழக்குமாகாண சுகாதாரப்பணிப்பாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணித்துள்ளார். இது இவ்வாறிருக்க

அன்டரியன் பரிசோதனை ஊடாக சகல தொற்றாளர்களையும் இனம் காணமுடியாதென்றும் பீ.சீ.ஆர் பரிசோதனை ஊடாக மாத்திரமே சகல தொற்றாளர்களையும் இனம் காணமுடியுமென நுண்ணுரியல் விசேட வைத்தியநிபுணர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை நேற்று குறிப்பிட்டபிரதேசத்துக்கு நுண்ணுரியல்விசேடவைத்திய நிபுணர்வைதேகி ரஜீவன் பிரான்சிஸ் உட்பட மூன்று மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும் குறிப்பிட்ட பிரதேசத்துக்கு சென்று நிலமைகளை ஆராய்ந்தனர். தொற்று சம்பந்தமாக கல்முனை பிராந்தியப்பணிப்பாளர் டாக்டர் குண சுகுணன் கருத்து தெரிவிக்கையில், சமுக இடைவெளி பேனாமை, முகக்கவசம் அணியாமை, பலர்ஒன்றுகூடுதல் போன்ற நடவடிக்கைகள் மிக உன்னிப்பாக கண்காணிக்கப்படவுள்ளன. அக்கரைப்பற்று சுகாதாரப்பிரிவு தனிமைப்படுத்தல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர், மாலைத்தீவு பாதுகாப்பு அமைச்சர்

இன்று (27) இலங்கைக்கு வர உள்ளனர் இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி கோதபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து பிராந்திய பாதுகாப்பு பிரச்சினைகள் குறித்து விவாதிப்பார் என்று அறியப்படுகிறது. முன்னதாக, சீன மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர்.

## மட்டக்களப்பில் நீதிமன்ற தடை உத்தரவுக்கு எதிராக தாக்குதல் செய்த வழக்கு நீதிமன்றம் நிராகரிப்பு

நிராகரித்ததுடன் மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் செய்ய தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது கார்த்திகை 27 ம் திகதி மாவீரர் நினைவேந்தல்இடம்பெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவடிமுன்னமாரி துயிலும் இல்லத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியேந்திரன் விளக்கு ஏற்ற உள்ளதாகவும் இந்த நிகழ்வு இடம்பெறும் இடத்தில் கொரோனா தொற்று ஏற்படும் மற்றும் விடுலைப் புலிகளை மீண்டும்கட்டியொழுப்புவதாக அவருக்கு எதிராக பொலிசார் நீதிமன்ற தடை உத்தரவு ஒன்று பெறப்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த தடை உத்தரவுக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (23) திகதி ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரன் தலைமையில் 27 சட்டத்தரணிகள் ஆஜராகி வழக்கு தாக்குதல் செய்தனர் இந்த வழக்கை ஆராய்ந்த நீதவான் வியாழக்கிழமை வழக்கை ஒத்திவைத்தர் . வியாழக்கிழமை (26) இந்த வழக்கு எடுக்கப்பட்ட நிலையில் தடை உத்தரவுக்கு எதிராக தாக்குதல் செய்யப்பட்ட வழக்கை நீதவான் நிராகரித்ததுடன் மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் விளக்கு ஏற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கு தடை விதித்து கட்டளை பிறப்பித்துள்ளாதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியேந்திரன் தெரிவித்தார். அதேவேளை மக்கள் தமது வீடுகளில் மாவீரர்களுக்கான விளக்கை ஏற்றி அனுஷ்டிக்குமாறு அவர் தெரிவித்தார்

## திருகோணமலையிலும் பொதுமக்கள் கூடுவதற்கு தடை

பொதுமக்கள் கூடுவதினால் சுகாதாரம் மற்றும் மனித உயிர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படும் என்ற அடிப்படையில் திருகோணமலை நீதிமன்றில் தடை உத்தரவு கோரப்பட்டிருந்தது. திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதகர் துமிந்த ராஜபக்ச அவர்கள் மூலம் நேற்று (26) திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரப்பட்டிருந்தது. இந்நிலையில் திருகோணமலையில் வசித்துவரும் ராமநாதன் ஸ்ரீ ஞானேஸ்வரன் (கண்ணன்) மற்றும் ஜெயலக்ஷ்மி அல்லது ஆசா என்று அழைக்கப்படும் இருவருக்குமே பிக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நடவடி சட்டக் கோவையின் 106 (01) பிரிவின் கீழ் இத்தடை உத்தரவு கோரப்பட்டிருந்தது. 26ஆம் திகதி தொடக்கம் 14 நாட்கள் வரை திருகோணமலை சிவன் கோயில் முன் பகுதி மற்றும் ஆளுநர் அலுவலகத்திற்கு முன் சட்டவிரோதமாக பொதுமக்கள் கூடுவதற்கும் அவ்வாறு பொதுமக்கள் கூறுவதினால் சுகாதாரம் மற்றும் மனித உயிர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படும் என்ற அடிப்படையில் இத்தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுத்தரவினை திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதவான் சமிலா குமாரி ரத்நாயக்க வழங்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை பகுதியில் ஒன்றுகூட தடை

நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தடைவிதித்துள்ளது பருத்திததுறை நீதிவான் நீதிமன்றத்தில் பருத்திததுறை நெல்லியடி வல்வெட்டித்துறை பொலிசாரால் மாவீரர் தின நினைவுக்காக ஒரு

சிலர் கூட இருப்பதாகத் தெரிவித்து தாக்கல்செய்யப்பட்ட வழக்கு பருத்திததுறை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இத்தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மாவீரர் தினநிகழ்வுகள் இன்று 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொதுஇடங்களில் நடத்தப்படவிருப்பதால் கொரோனா தொற்றினால் அந்நிகழ்வுகளை நடத்த முடியாது என பொலிசார் தெரிவித்ததையடுத்து இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதுபோன்ற வழக்கு கடந்தவாரம் இதே பொலிசாரால் தாக்கல் செய்த வழக்கினை கடந்த திங்கட்கிழமை பொலிசார் வாபஸ் பெற்றிருந்தனர்.

## நுவரெலியா மாவட்டத்தில் எழுவருக்கு கொரோனா

நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். வட்டவளை - குயில்வத்தை, கினிகத்தேன - ஹிட்டிகே கம, மஸ்கெலியா - மவுசாகலை நைன்ஸா மேல் பிரிவு தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே இவ்வாறு வைரஸ் தொற்றியுள்ளது. குறிப்பாக அட்டன், கினிகத்தேன ஹிட்டிகேகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மூன்று வயது குழந்தை, மூன்று ஆண்கள் மற்றும் பெண்ணொருவர் உள்ளடங்குகின்றனர். கொழும்பிலிருந்து நுவரெலியா மாவட்டத்துக்கு வருபவர்கள் கினிகத்தேனை, கலுகல்ல பகுதியில் உள்ள சோதனைச்சாவடிக்கு அருகாமையில் பி.சி. ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். கடந்த சனிக்கிழமை முதல் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில் மூன்று வயது குழந்தையின் தாயிடமும் கொழும்பில் இருந்து வந்தவர் என்ற அடிப்படையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. பரிசோதனை முடிவில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையிலேயே ஐவருக்கு வைரஸ் தொற்று இன்று (26) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## சாதாரண தர பரீட்சை தொடர்பில் டிசம்பர் தொடக்கத்தில் தீர்மானம்

நிலைமையை மறுஆய்வு செய்த பின்னர் டிசம்பர் தொடக்கத்தில் சாதாரண தர பரீட்சை குறித்து கல்வி அமைச்சு இறுதி முடிவை எடுக்கும். இந்த காலகட்டத்தில் பாடசாலைகளின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஆய்வு செய்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இலங்கையில் 10,000 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்பட்ட போதிலும், சமீபத்தில் திட்டமிட்டபடி 5,100 பாடசாலைகள் மட்டுமே மீண்டும் திறக்கப்பட்டன.

தரம் 10 மற்றும் 11 மாணவர்களுக்கு திட்டமிடப்பட்டபடி மீண்டும் ஆரம்பிக்க தவறிய அனைத்து பாடசாலைகளும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதி உட்பட, டிசம்பர் தொடக்கத்தில் மீண்டும் திறக்க மற்றும் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க முடியுமா என்பதை கண்காணிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படும். அமைச்சு ஆன்லைன் கற்பித்தலை ஒரு மாற்று முறையாக அறிமுகப்படுத்தியது, ஆனால் இது பாடசாலைகளுக்கு செல்வதற்கான முழுமையான மாற்றாக கருத முடியாது, க.பொ.த. சாதாரண நிலைத் தேர்வுக்கு அமர்ந்திருக்கும் மாணவர்களுக்கு தேவையான பாடத்திட்டங்களையும் நியாயத்தையும் அனைத்து பள்ளிகளும் நிர்வகித்திருந்தால் கல்வி அமைச்சகம் மதிப்பாய்வு செய்யும்.

இந்த காலகட்டத்தில் மீண்டும் திறக்கத் தவறும் பாடசாலைகளும் மதிப்பீடு செய்யப்படும், மேலும் தேர்வுகளுக்கு அமர்ந்திருக்கும் மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதிக்காமல் அத்தகைய பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படும்.

அதன்பிறகு, 2021 ஜனவரி 18 முதல் 27 வரை திட்டமிட்டபடி தேர்வுகளை நடத்தலாமா, அல்லது ஒத்திவைக்க வேண்டுமா என்பது குறித்து முடிவு எடுக்கப்படும். திட்டமிட்டபடி பரீட்சைக்கு முன்னேற முடிவு செய்யப்பட்டால், தற்போதைய சூழ்நிலையில் தேர்வை நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து அமைச்சகம் சிந்திக்க வேண்டியிருக்கும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

## மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதை அனுமதிக்காவிட்டாலும் தடை செய்யாமலிருப்பதே நாகரிக நடைமுறையாகும்

கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மாவீரர் தின அனுஷ்டிப்பு தொடர்பிலான தடைவிதிப்பு விடயங்கள் குறித்து கருத்து வெளியிகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர', இலங்கையில் தமிழ் இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் சித்தாந்த ரீதியான ஒரு போராட்டமல்ல. அதாவது ஆட்சியைக் கவிழ்த்து பொதுவுடமை அல்லது சோசலிச அரசை உருவாக்குகின்ற நோக்கம் கொண்டதல்ல. மாறாக, குடியேற்ற நாட்டு ஆட்சிக் காலத்தின் இறுதியில் பெரும்பான்மை மக்களைச் சென்றடைந்த தமது உரிமையை மீட்டெடுப்பதற்கான போராட்டமே. இவ்வகையில் இது உரிமைப் போராட்டமாகும். தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்பதை பண்டாரநாயக்கா தொடக்கம் மைத்திரிபால சிறிசேன வரையிலான அவ்வப்போதைய ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் அரசியல் தீர்வுக்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவை செயலுருப் படுத்தும் தருவாயில் பல்வேறு காரணங்களால் நின்று போயின. ஆக, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று அவசியம் என்பது இலங்கை அரசியலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மையாகும். அனுசரணை வழங்கிய நாடுகளின் உதவிகளோடு அவ்வப்போது ஆட்சி பீடம்ஏறியஇலங்கைஅரசுகள்போராளிகளோடு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர். இது அவர்களுடைய போராட்டத்தை இலங்கை அரசும் அனுசரணை வழங்கிய நாடுகளும் ஏற்றுக் கொண்டன என்பதன் வெளிப்படை அம்சமாகும். இத்தகைய நடைமுறைகளின் வெளிப்பாடாக சமாதானப்பேச்சுவார்த்தைகள் நிகழாத காலங்களில் சண்டைகள் நடைபெற்ற பொழுதும்கூட பல சந்தர்ப்பங்களில் போரில் கொல்லப்பட்ட இரண்டு பக்க வீரர்களும் பரிமாற்றம் செய்யப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. அதாவது பயங்கரவாதிகள் என்று அரசினால் வர்ணிக்கப்பட்ட கொல்லப்பட்ட போராளிகள் அதே போராளீ இயக்கத்திற்கு குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு கையளிக்கப்பட்டனர். இதன் மறுதலையாக ஆக்கிரமிப்பபுப் படை என்று போராளிகளால் நாமமிடப்பட்ட கொல்லப்பட்ட இராணுவத்தினர் இராணுவத்திற்குக் கைமாற்றப்பட்டார்கள். இந்த நிகழ்வின் வெளிப்பாடு என்ன? போரிலே கொல்லப்பட்ட பின் கொல்லப்பட்டவர்கள் பயங்கரவாதிகளாகவோ ஆக்கிரமிப்புப் படையாகவோ கொள்ளப்படவில்லை. அவர்கள் இரு பக்கத்தினராலும் அங்கீகரிக்கப்பட்ட வீரர்களாகவே மதிக்கப்பட்டனர். கைமாற்றம் செய்யப்பட்ட இந்த வீரர்கள் கண்ணியத்துக்குரியவர்களாகக் கருதப்பட்டதோடு அவர்கள் கௌரவமான அஞ்சலியைப் பெறுவதனை இரு பக்கத்தினரும் ஏற்றுக் கொண்டார்கள். நாகரிகமடைந்த எல்லா உலக நாடுகளிலும் இதுவே நடைமுறையாக உள்ளது. இந்த வகையிலே கொல்லப்பட்ட போராளிகள் என்போர், கண்ணியத்துக்கும் மரியாதை செலுத்துவதற்கும் உரியவர்களாவர். போர் நடைமுறைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நாகரிகச் செயற்பாடாகவே இது கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வகையில், ஈழப் போரில் ஈடுபட்ட மாவீரர்களின் அஞ்சலி என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நடைமுறை என்பதனையும் நாகரிக உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை என்பதனையும் அரசு மறுக்க முடியாது. இப்பொழுது போர் ஒழிந்துவிட்டது. போர் ஒழிந்தாலும் போரிலே உயிர்த்தியாகம் செய்த இரு பக்க வீரர்களுக்குமான அஞ்சலியை இரு பக்கத்தினரும் தொடர்ந்து செய்ய வேண்டியது நாகரிக உலகின் ஒரு விழுமியமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். இனி ஏன் குறித்த இந்த நாளில் அதனைச் செய்ய வேண்டும் என்கின்ற விடயத்தை நோக்கலாம். விடுதலைப்புலிகள் செயற்பாட்டில் இருக்கும் காலத்தில் கண்ணியத்திற்குரிய இந்த வீரர்களுக்கான அஞ்சலியை அவர்கள் ஒரு குறித்த நாளில் செய்து வந்தார்கள். அப்பொழுது வீரர்களின் உறவினர்களும் பொது மக்களும் அதில் கலந்து கொண்டார்கள். இப்பொழுது விடுதலைப்புலிகள் செயற்பாட்டில் இல்லை. கொல்லப்பட்ட வீரர்களின் உறவினர்களும் பொது மக்களும் இருக்கின்றார்கள்.







# பொத்துவில் ஊறணி மக்களின் காணி விரைவில் கிடைக்கும்

## 834நாள் போராட்டத்தில் கருணா அம்மான் தெரிவிப்பு



(காரைதீவு நிருபர் சகா)

பொத்துவில் 60ஆம் கட்டை ஊறணி மக்களின் நீண்டகால பிரச்சினையான தாம்குடியிருந்த காணிகள் மிகவிரைவில் மீண்டும் பெற்றுக்கொடுக்கப்படும். இவ்வாறு நேற்று அங்கு விஜயம்செய்த பிரதமரின் மட்டு.அம்பாறை இணைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான வினாயகமூர்த்தி முரளிதரன் (கருணாஅம்மான்) மக்கள்மத்தியில் தெரிவித்தார். பொத்துவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஊறணி 60ஆம் கட்டை காணி பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரும்முகமாக கருணாஅம்மான் நேற்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் இ.வ.கமலராஜன் மற்றும்பொத்துவில் பதில் பிரதேச செயலாளர் எ.சந்தருபன் முன்னாள் பாராளமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் பொத்துவில் பிரதேச அமைப்பாளர் எஸ்..ரமணன் ஆகியோருடன் விஜயம்செய்தார். அங்கு 834நாட்களாக தொடர்ச்சியாக முகாமிட்டு சத்தியயாக்கிரகப் பேராட்டத்திலீடுபட்டுவரும் ஊறணி மக்களுடன் கலந்துரையாடினர். மக்கள் தங்கள் பிரச்சினை பற்றி கூறினர். மக்கள் தலைவி றங்கத்தனா முழுவிபரங்களையும் சமர்ப்பித்து சமகால சவால்கள் பற்றிவிபரித்தார். அதன்பின்னர் கருணா அம்மான் அங்கு பேசுகையில்: பொத்துவில் தமிழ்மக்களது பிரச்சினை பற்றி பிரதமருடன் பேசியுள்ளேன். தற்போது ஆன சூழல் சுற்றாடல் அதிகாரசபையின் அனுமதி மட்டுமே கிடைக்கப்பெறவேண்டும். அதனை ஒருவாரத்தில் எமது மேலதிக அரசஅதிபர் ஜெகதீசன் பெற்றதும் காணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். நீங்கள் இங்கு பல்லாண்டுகாலம் வாழ்ந்துவந்துள்ளீர்கள். அன்றிருந்த ஒரு குடும்பம் இன்று 9குடும்பங்களாக பெருகியிருக்கும். எனவே அனைவருக்கும் காணி வழங்க ஏற்பாடுசெய்யப்படும். தற்போது 200குடும்பங்களுக்கும் மேலாக காணிவழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முதல் இங்குள்ள காட்டை வெளியாக்க நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறேன். அதுவரை பொறுமையாகஇருங்கள்.

பிரதமர் மஹிந்தராபக்சவின் திட்டத்தின்கீழ் நாட்டில் காணிஇல்லாமல் யாரும் இருக்கக்கூடாது என்றசிந்தனைஉள்ளது. அதன்படி நான் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 5500குடும்பங்களுக்கு காணி பெற்றுக்கொடுத்துள்ளேன். முழுஇலங்கையிலும் இதுவரை ஒன்றரை லட்சம்பேருக்கு காணிவழங்கப்பட்டுள்ளது. நீங்கள் எனக்கு கடந்ததேர்தலில் 30ஆயிரம் வாக்குகளை அள்ளிதந்துள்ளீர்கள். எம்.பியாக வராவிட்டாலும் அதற்குமேல் சேவைசெய்யக்கூடிய பதவியை எமது பிரதமர் தந்துள்ளார். படிப்படியாக பல வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவிருக்கிறேன். மக்களின் ஒத்துழைப்புக்கிடைத்தால் பாரிய பணிகளை இங்குசெய்யவிருக்கிறேன். பெண்தலைமைத்துவம் தாங்கும் குடும்பங்களுக்கு விசேட வேலைத்திட்டம் வகுத்துள்ளோம் என்றார்.




## பாடசாலைகளுக்கு 51வீதமான மாணவர்களே வருகை

மாகாணத்தில் குழந்தைகளின் வருகை நாற்பத்தாறு சதவீதமும், ஆசிரியர்களின் வருகை எழுபத்தைந்து சதவீதமும், தெற்கு மாகாணத்தில் குழந்தைகளின் வருகை முப்பத்தைந்து சதவீதமும், ஆசிரியர்களின் வருகை நாற்பத்தொன்பது சதவீதமும், சப்ரகமுவ மாகாணத்தில் குழந்தைகளின் வருகை எண்பத்து மூன்று சதவீதமும், ஆசிரியர்களின் வருகை நாற்பத்தேழு சதவீதமும் ஆகும்.

வட மத்திய மாகாணத்தில் குழந்தைகள் தொண்ணூற்றொன்பது சதவீதம், ஆசிரியர்களில் எழுபத்து நான்கு சதவீதம், வடக்கு மாகாணத்தில் ஐம்பத்து இரண்டு சதவீதம் குழந்தைகள், ஆசிரியர்களில் எண்பத்தைந்து சதவீதம், கிழக்கு மாகாணத்தில் அறுபத்திரண்டு சதவீதம் குழந்தைகள், ஆசிரியர்களில் எண்பத்து ஆறு சதவீதம், ஊவாவில் எழுபத்து ஒரு சதவீதம் குழந்தைகள் மற்றும் எண்பத்து ஆறு சதவீதம் குழந்தைகள் கலந்து கொண்டனர் என்று செயலாளர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்ட அமைச்சுக்கள்

தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி ஊடக பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது. இதேவேளை, ரியர் அத்மிரால் சரத் வீரசேகர பொது பாதுகாப்பு அமைச்சரவை அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துக் கொண்டுள்ளார். அத்துடன் அமைச்சர் சமல் ராஜபக்ஷ உள்நாட்டலுவல்கள் மற்றும்அனர்த்தமுகாமைத்துவஇராஜாங்க அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துக் கொண்டுள்ளார்.

## Z மதிப்பெண்களை நியாயமற்ற முறையில்

அனுமதிக்கப்பட்டுள்ளதாக ***The Inter-University Student Federation (IUSF)*** குற்றம் சாட்டியுள்ளது. அமைப்பு சார்பாக ரத்கார்வே ஜினரத்தின தேரர் கருத்து தெரிவிக்கையில்

பிரச்சினையைத் தீர்க்க அதிகாரிகளுடன் மூன்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், பிரச்சினையைத் தீர்க்க பத்து நாட்களுக்குள் கலந்துரையாடல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் 23 ஆம் தேதி உறுதியளித்தது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகங்களில் சேருவது ஆரம்பமாகிவிட்டது மற்றும் பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன், தற்போது சேர்க்கப்பட்டுள்ள எந்தவொரு மாணவருக்கும் எந்த அநீதியும் ஏற்படாது . ஆனால் குறிப்பிட்ட பிரச்சினையை விரைவாக தீர்க்கவும், பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற அனைவரையும் பல்கலைக்கழகங்களில் சேர்க்க ஏற்பாடு செய்யவும் அதிகாரிகள் முன்வரவேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கடுமையான பொலிஸ் இராணுவ பாதுகாப்பு

நிலையில் தற்போது நீதிமன்றங்களினால் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 6 பொலிஸ பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய 46 பேருக்கு தடை உத்தரவுகள் வழங்கப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை பொது வெளியில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பகுதிகள் எங்கும் இராணுவத்தினரின் பிரசன்னம் போலிசாரின் உடையை பிரசன்னமும் அதிகரித்துக் காணப்படுகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை செய்ய முற்படுகின்ற மாவீரர் துயிலும் இல்ல வளாகங்கள் மற்றும் வழமையான நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறுகின்ற இடங்களில் ஆயுதம் தாங்கிய போலிசார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் முல்லைத்தீவு நகரப் பகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே இருந்த இராணுவ சோதனைச் சாவடிகளை விட விசேடமாக போலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். வழமையைவிட அண்மை நாட்களாக இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் மோட்டார் சைக்கிள் பவனிகள் என மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளது

இந்நிலையில் மக்கள் அச்ச உணர்வுடன் நடமாடிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான முல்லைத்தீவு நகர் பகுதிகளில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளும் முல்லைத்தீவு கடற்கரையில் வழமையாக நினைவேந்தல் நிகழ்வு செய்யப்படுகின்ற நிலையில் கடற்கரையில் போலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு போலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர் நகர் பகுதிகளில் வீதிகளிலேயே இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளும்சுமார் 10க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் இராணுவத்தினர் வீதிகள் எங்கும் சென்று வருகின்ற நிலையில் மக்களை அச்சுறுத்தும் விதமாக செயல்பட்டு வருகின்றனர். இந்த செயற்பாடுகளுக்கு வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்

# திருகோணமலையில் ஹேரொயின் போதைப் பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு ஒன்றரை வருடம் சிறைதண்டனை

( எப்.முபாரக்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹேரொயின் போதைப் பொருள் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு ஒன்றரை வருடம் சிறைதண்டனையும் ,பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் அத்தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு மாதம் சிறைதண்டனை விதித்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க நேற்று(26) உத்தரவிட்டார். சுமேதகம,திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நபர் 635 மில்லிகிராம் ஹேரொயின் போதைப் பொருள் வைத்திருந்தமை,விற்பனை செய்தமை மற்றும் கொண்டு சென்றமை போன்ற எட்டு குற்றச் சாட்டுகளுடன் தொடர்புடைய ஒருவருக்கே இவ்வாறு சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்தநபர்ஆறுமாதம்சிறைதண்டனைஅனுபவித்து விட்டு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளியில் விடுதலையானதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மகிலூர் பிரதேசத்தில் வீட்டினுள் உள்நுழைந்த முதலை மடக்கி பிடிப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ளமகிலூார்கண்ணபுரம்த்திலுள்ள வீடு ஒன்றில் 10 அடி நீளம் கொண்ட முதலை வியாழக்கிழமை (26) காலையில் ஊள்நுழைந்துது இதனை பொதுமக்கள் உதவியுடன் வனஜீவராசிகள் அதிகாரிகள் மடக்கி பிடித்து எடுத்துச் சென்றுள்ளர் குறித்த வீட்டின் பகுதியில் சம்பவதினமான காலை 8.30 மணியளவில் முதலை ஒன்று உள்நுழைந்துள்ளது இதழனயடுத்து அப்பகுதிமக்கச் பீதியடைந்ததன் இதனையடுத்து அங்க் வனஜீவராசிகள் அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு பெதுமக்கள் அவர்களுடன் ஒன்றினைந்து குறித்த முதலையை மடக்கிபிடித்து எடுத்துச் சென்றுள்ளனர்

கிழக்குச் சூரியன்
சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
PAGE 04 27 NOVEMBER 2020, FRIDAY

# கல்முனையில் சந்தைகள் உள்ளிட்ட அனைத்து பொது இடங்களையும் மூடுமாறு மேயர் பணிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொதுச் சந்தைகள், டியூட்டரிகள், விளையாட்டு மைதானங்கள், விழா மண்டபங்கள், பொது நூலகங்கள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் உட்பட மக்கள் கூடுகின்ற அனைத்துப் பொது இடங்களையும் மறுஅறிவித்தல் வரை மூடுமாறு மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் நேற்று (26) பிற்பகல் பணிப்புரை விடுத்துள்ளார்.

அக்கரைப்பற்றில் கொரோனா தொற்றாளர்கள் இன்று அதிகளவில் உறுதி செய்யப்பட்டிருப்பதனால், இப்பிராந்தியத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டு, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சரினால் 2020.03.25ஆம் திகதி வெளியிடப்பட்ட 2168/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மாநகர முதல்வருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்



கீழ் அவர் இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் கல்முனைப் மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் பொதுச் சந்தைகள், தனியார் கல்வி நிலையங்கள், பொது நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள், விழா மண்டபங்கள், சிறுவர் பூங்காக்கள் உட்பட மக்கள் கூடுகின்ற அனைத்து இடங்களும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட வேண்டும்.

கடற்கரைப் பகுதிகள், கடைத்தெருக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் மக்கள் தேவையின்றி நடமாடுவது கண்டிப்பாக தடை செய்யப்படுவதுடன் இப்பகுதிகளில் ஒன்றுகூடுவது முற்றாக தடை செய்யப்படுகிறது.

அனைத்து சந்தைகளும் மூடப்பட்டு, நெரிசலற்ற விசாலமான இடங்களிலேயே சமூக இடைவெளி பேணப்பட்டு, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடித்து, மீன், மரக்கறி வகைகள் உள்ளிட்ட வியாபார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டளவில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

சுகாதாரத்துறையினரால் விடுக்கப்படுகின்ற அனைத்து அறிவுறுத்தல்களையும் வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் பொருட்டு சுகாதார நடைமுறைகள் யாவும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மிகவும் இறுக்கமாக அமுல்படுத்தப்படும்.

சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறுவோர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர முதல்வர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

# சம்மாந்துறையில் கொரோனா விழிப்புணர்வு செயற்திட்டம்





(ஐ.எல்.எம் நாஸிம்)

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவனையடுத்து, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து மனித நேய நற்பணிப் பேரவை சம்மாந்துறை- ஸ்ரீலங்கா அனுசரணையில் கொரோனா விழிப்புணர்வு செயற்றிட்டம் "கொரோனா வைரஸிடமிருந்து நம்மை நாம் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் சம்மாந்துறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினமும் (25), நேற்றும் (26) இரண்டு நாட்களாக இடம்பெற்றது.

இந்த விழிப்புணர்வு நிகழ்வின் போது சுகாதார நடைமுறைகளை தினமும் பின்பற்றி நடக்குமாறு ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப்பிரசுமும் விநியோகிக்கப்பட்டன.

இதில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம்.கபீர், மனித நேய நற்பணிப் பேரவை சம்மாந்துறையின் தலைவர் மனித நேயன் இர்ஷாத் ஏ.காதர், பொதுச் சுகாதார அதிகாரிகள், மனித நேய நற்பணிப் பேரவையின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்களுக்கு covid-19 நோயெதிர்ப்பு

## பணம் வழங்கும் நடவடிக்கை



(பைஷல் இஸ்மாயில்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொரோனா நோய்த் தொற்றுக் கிருமியை எதிர்கொள்ளும் Safoof Josand (Anti Viral Choorana) யூனானி மருந்துப் பொதிகள் வழங்கி வைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபிலினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையை (25) அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கு கொரோனா நோய்த் தொற்றுக் கிருமி எதிர்கொள்ளும் ஞயகழூக துழளயனெ (Anti Viral Choorana) யூனானி மருந்துப் பொதிகளை பாடசாலையின் அதிபர் ஏ.முஹம்மட் அஸ்மியிடம்

கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபில் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை தல ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.பி.எம்.றஜீஸ், அட்டாளைச்சேனை பிரதேச சமூகநல வைத்தியர் எம்.ரீ.அமீரா உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சாரின் பணிப்புரைக்கமைவாக சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.ஸ்ரீதரின் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணனின் நெறிப்படுத்தலில் அக்கரைப்பற்று முகம்மதியாபுரம் மருந்து உற்பத்திப் பிரிவில் விஷேடமாக தயாரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல அரச நிறுவனங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு சிலரின் அசமந்தப்போக்கு எல்லோருக்கும் ஆபத்து

## அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவர் சபீஸ்

(நூருள் ஹுதா உமர்)



அக்கரைப்பற்று மக்கள் பொருட்கள் வாங்குவதற்கு அவசரப்பட்டு இத்தொற்றினை பரப்புபவர்களாக இருந்துவிடாதீர்கள். அவ்வாறு ஏதாவது பொருள் தட்டுப்பாடு ஏற்படுமிடத்து உங்கள் காலடிக்கு பொருட்களை கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் ஏலவே நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று இப்போதும் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம் என

அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் தலைவரும், மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றின் சமகால நிலைகள் தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலையே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும்,

கொரோனா தொற்று அக்கரைப்பற்றிலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்கள். அரசாங்க அதிகாரிகள் நேரடியாகவும் எமது சகோதரர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எழுதிவந்ததை நாம் முழுமையாக ஏற்க மறுத்துவிட்டோம்

இருந்தாலும் இத்தருணத்தில் அச்சப்படாமல் பாதுகாப்பாக இருப்பது நம் கடமையாகும்.

தொற்று பரவலாக்கத்தை தடுப்பதற்கு அக்கரைப்பற்றினை முழுமையாக மூடுவது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற போதும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு முன்னுரிமை வழங்குவதே இப்போதைக்கு சாலச்சிறந்ததாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS



Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரி பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்படாத 389 பட்டதாரிகளின் மேன்முறையீடு பரிசீலனைக்குட்படுத்தப்படுகிறது

**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுனர்களாக இணைத்துக் கொள்ளப்படாத 389 பட்டாதாரிகள் மேன்முறையீட்டு செய்திருந்தனர். அவர்களது விண்ணப்பங்கள் தற்பொழுது பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அதகி பட்சமாக 123 பட்டதரிகளும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 6 பட்டதாரிகளும் மேன்முறையீடு செய்திருந்தனர். இதுதவிர களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவில் 57 பேரும், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் 31 பேரும், ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் பிரிவில் 26 பேரும், கோறளைப் பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 25 பேரும், காத்தான்குடி மற்றும் மணமுனைப் பற்று ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 22 பேரும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் 16 பேரும், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் 15 பேரும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 13 பேரும், மண்முனை மேற்கு வவுனதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 12 பேரும், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் 11 பேரும், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 10 பேரும் மேன்முறையீடு செய்துள்ளனர். இம்மாவட்டத்தில் 2 ஆயிரத்தி 88 பட்டதாரி பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், 1966 பட்டதாரி பயிலுனர்கள் மாத்திரமே 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தமது கடமையினைப் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குச்சவெளி பகுதியில் பத்தாயிரம் ஏக்கர் திடல் காணிகளில் நெற்செய்கை முன்னெடுப்பு



**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் திடல் காணிகளின் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குச்சவெளி பிரதேசத்தின் சலப்பையாறு, நிலாவெளி,மற்றும் குச்சவெளி போன்ற பகுதிகளில் தற்போது விதைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாரி மழையை நம்பி முன்னெடுக்கப்படும் வேளாண்மை செய்கையானது திடல் காணிகள் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உழவு இயந்திரம் உழுதல் மற்றும் விதைத்தல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக் விதைப்பு பணிகளை மேற்கொண்டு ஆரம்பித்து வைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு சிவானந்தா கேட்போர் கூடத்தில் இரத்ததான நிகழ்வு

மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டு கழகம் அமரர்.சாமித்தம்பி தனபால் அவர்களின் நினைவாக இரத்ததான நிகழ்வை எதிர்வரும் 28.11.2020 அன்று சனிக்கிழமை சிவானந்தா மைதான கேட்போர் கூடத்தில் நடாத்தவுள்ளது இவ் இரத்ததான நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு சிவானந்தா விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு. முரளிதரன் அழைத்துள்ளார். அமரர். சாமித்தம்பி தனபால் சிவானந்தா விளையாட்டு கழகம் சார்பாக கிரிக்கெட் விளையாட்டில் தன் திறமையை வெளிக்கொனர்ந்த ஒரு மிகச்சிறந்த வீரர். அவர் தற்போது இருந்திருந்தால் இலங்கையில் இன்று ஆரம்பமாகும் LPL போட்டியில் மட்டக்களப்பு சார்பாக ஒரு வீரராக களம் கண்டிருப்பார். அந்த வீரரின் ஞாபகார்த்தமாகவே இந்த இரத்ததான நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளதாக சிவானந்தா விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு.முரளிதரன் தெரிவித்தார் நாமும் இனைந்து ஒரு துளி இரத்தத்தில் ஓர் உயிர் காக்க உதவுவோம்.

## 39 சமுர்த்தி பயனாளிகளுக்கு கழிப்பறை அமைக்க உதவிதிட்டம்



கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் கழிப்பறை இல்லாத சமுர்த்தி வபயனாளிகளுக்கு கழிப்பறை அமைக்கும் வேலைத்திட்டத்திற்கான முதற் கட்ட நிதியினை வழங்ககும் வேலைத் திட்டத் திட்டம் இன்று 2020.11.26ம் திகதி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவில் 39 சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் B.M.ருமைஸ், சமுர்த்தி திட்ட முகாமையாளர் A.L.சரீப், சமுர்த்தி வங்கி முகாமையாளர் S.ரவிச்சந்திரன், சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர்A.L. ஐயூப்கான், பிரிவு உத்தியோகத்தர்களான A.C.சாதிக்கீன், C.M.S.இஸ்மாயில் ஆகியோர் கலந்து கொண்டனர்

## ஐவர் ஹெரோயினுடன் கைது

**(எப்.முபாரக்)**

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட ஜின்னா நகர் ஆலிம் நகர், பெரியபாலம் பிரதேசங்களைச் சேர்ந்த ஐவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் 25,23,22 மற்றும் 24 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் பாவிக்க முற்படும் போது திருகோணமலை சர்தாபுர விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த ஐவரும் இன்று(26) கைது செய்யப்பட்டு மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரிடமிருந்து இரண்டு கிராம் இருபது மில்லிகிராம் ஹெரோயின் விஷேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டு மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட ஐவரையும் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு கைப்பற்றப்பட்ட ஹெரோயினையும் மூதூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## பின்தங்கிய பாடசாலை மாணவனை பாராட்டிய பணிப்பாளர்



**(பொன்ஆனந்தம்)**

தி ஃமூ தூர் சின்னக்கும் அ. த க வித்தியாலத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில்பரீட்சையில்அதிக புள்ளிகளைப்பெற்ற மாணவனை மூதூர் வலயக்கல்விப்பணிப்பாளர் நேரடியாகச்சென்று நேற்று பாராட்டுத் தெரிவித்தார் பின்தங்கிய கிராமத்தில் உள்ள இப்பாடசாலையில் 09மாணவர்கள் தோற்றி104 புள்ளிக்கு மேல் சகலரும் பெற்றனர். செல்வன் லி. மேனுஜன் 175 புள்ளிகள் பெற்றார். இன்நிலையில் இவர்கள் சகலருக்கும் பணிப்பாளர் நல்வாழ்த்துக்கள் தெரிவித்தார் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளருடன் பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் குழுவினர் வருகை தந்தனர். கற்பித்த அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டினார்.

## ஏகமனதாக மூதூர் சபையின் பாதீடு நிறைவேற்றம்

**(பொன்ஆனந்தம்)**

மூதூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் ஏகமனதாக எதிர்ப்பின் நிறைவேற்றப்பட்டது. சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தலைமையில் வியாழக்கிழமை (26) சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோதே ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது.சபையின் மொத்த உறுப்பினர்கள் 24 பேரும் இன்றைய அமர்வுக்கு சமூகமளித்திருந்ததோடு அனைவரும் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவளித்திருந்தனர். 2021 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் சபை வருமானமாக 8 கோடி 12 இலட்சத்தி 41ஆயிரத்தி 217 ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. செலவீனமாக 8 கோடி 12 இலட்சத்தி 32 இரண்டாயிரத்தி 246 ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. என தவிசாளர் ஆரூஸ் தெரிவித்தார்

## நஞ்சற்ற விவசாயம் : விவசாயிகளை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு





**(பொன்ஆனந்தம் )**

“நஞ்சற்ற விவசாயம்” தொடர்பில் விவசாயிகளை தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இன்று திருகோணமலை புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது. நஞ்சற்ற விவசாயத்தின் தேவை இன்று உணரப்படுவதனால் அரசாங்கம் இத்துறைசார் உற்பத்திகளை மேம்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என இங்கு தெளிவு படுத்தப்பட்டது.

(Peace winds Japan) பீஸ்வின் ஜப்பான் நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் விழிப்புணர்வு வேலைத்திட்டம் மாவட்டத்தின் பல பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் கலந்து கொண்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். விவசாயிகளை இயற்கை விவசாயத்தின்பால் ஈர்த்து அவர்களது உற்பத்திகளுக்கு சிறந்த சந்தைவாய்ப்பை பெற்றுக்கொடுத்து தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதே இதன் மூல நோக்கமாகும் எனவும் தெரிவித்தனர்.

## சிப்தொர புலமைப்பிரிசில் திட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு



நாட்டின் ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கமைய சமுர்த்தி பெறும் குடும்பங்களில் உயர்தர கல்வி பயிலும் மாணவர்களுக்கான சிப்தொர புலமைப்பிரிசில் திட்டத்தில் மாணவர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி பெறும் குடும்பங்களில் உயர்தர கல்வி பயிலும் மாணவர்களுக்கு சிப்தொர உதவி வழங்கும் வகையில் பிரதேச செயலாளர் வழிகாட்டலில் நேர்முகத் தேர்வு செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எட்டு கிராம சேவகர் பிரிவில் சமுர்த்தி பெறும் உயர்தர கல்வி பயிலும் மாணவர்களில் 121 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இரண்டு வருடத்திற்கான நிதி உதவியாக மாதாந்தம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் வழங்கி வைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார். குறித்த நேர்முகத் தேர்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக
## கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கொவிட்-19 தொற்று நோயினால் மரணிப்போரின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிரான பிரேரணை கல்முனை மாநகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு புதன்கிழமை (25) பிற்பகல், மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றபோது மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி ரோஷான் அக்தரினால் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இதனை சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அஸீம் ஆமோதித்ததுடன் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவை வெளிப்படுத்தினர்.

இதன்போது கொவிட்-19 தொற்று நோயினால் மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது குறித்து கவலையும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டதுடன் உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையை மீறி, இன்னும் இன்னும் ஜனாஸாக்களை எரித்து முஸ்லிம்களின் மனதைபுண்படுத்தாமல், நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட இப்பிரேரணையை ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் உடனடியாக அனுப்பி வைக்குமாறு சபைச் செயலாளருக்கு மேயர் பணிப்புரை விடுத்தார்.

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்
## மன்னார் வலயம் முன்னேற்றம்

(வாஸ் கூஞ்ஞ)

அன்மையில் வெளியான (2020) ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் மன்னார் கல்வி வலயம் கடந்த ஆண்டைவிட இம்முறை முன்னேற்றம் கண்டுள்ளதாக மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி இவ்வாறு தெரிவித்தார்.

இவ் ஆண்டு (2020) மன்னார் கல்வி வலயத்தில் 1470 மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 145 மாணவர்கள் குறிப்பிடப்பட்ட வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று புலமைப்பரிசிலுக்கு தகுதிப் பெற்றுள்ளனர்.

அதேவேளையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் 87.2 வீதமான மாணவர்கள் இவ் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர். இவ் விகிதாசாரம் கடந்த வருடம் (2019) 72.04 வீதமாக இருந்தது.

அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் இவ் வருடம் 63.61 ஆக காணப்படுகின்றது. கடந்த வருடம் இதன் விகிதாசாரம் 45.3 ஆக காணப்பட்டது.

ஆகவே இவைகளை நோக்கும்போது இவ் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் கல்வி வலயம் முன்னேற்றம் கண்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது எனவும்

இவ் கொரோனா 19 அச்சுறுத்தல் இருந்தபோதும் அதிகமான பாடசாலை அதிபர்கள், இவ் மாணவர்களுக்கு கல்வியூட்டியவர்கள் குறிப்பாக இவர்கள் பெற்றோர் பிள்ளைகளை சோர்வடையாது சரியான ஆய்த்தங்களுடன் வைத்திருந்தமை பாராட்ட வேண்டியது. அதற்காக இவர்களுக்கு நான் இதன் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியில் நன்றியும் கூறி நிற்கின்றேன் என்றார்.

மன்னார் கல்வி வலயத்தில் 73 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இவ் பரீட்சையில் தோற்றியிருந்ததில் அதிக மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் எடுத்ததில் முதலாம் இடத்தை புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை 34 நபர்களும், இரண்டாம் இடம் பேசாலை சென். மேரிஸ் பெண்கள் வித்தியாலயம் 27 பேரும், மூன்றாம் இடம் புனித. சவேரியார் ஆண்கள் கல்லூரி 18 மாணவர்களும் தகுதி பெற்றிருந்தனர்.

இதேநேரத்தில் விகிதாசார அடிப்படையில் முதலாம் இடத்தை சிறுகண்டல் றோ.க.த.க.பாடசாலை, இரண்டாம் இடத்தை புனித.சவேரியார் பெண்கள் பாடசாலையும், மூன்றாம் இடத்தில் இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலையும், காணப்படுகின்றது.

வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் எடுத்தப் பாடசாலைகளும் மாணவர்களின் தொகை விபரங்கள் பின்வருமாறு

சித்திவிநாயகர் இந்து கல்லூரி 15, வங்காலை சென்.ஆன்ஸ் ஆரம்ப பாடசாலை 14, தலைமன்னார் பியர் றோ.க.த.க.பாடசாலை 03, சிறுகண்டல் றோ.க.த.க.பாடசாலை 03 முருங்கன் ஆரம்ப பாடசாலை 03, அல் அஷ ார் மகா வித்தியாலயம் 03, அரிப்பு றோ.க.த.க.பாடசாலை 03, உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை 02, பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை 02, கற்கடந்தகுளம் றோ.க.த.க.பாடசாலை 02, எருக்கலம்பிட்டி மகளீர் ம.வி. 02, கரிசல் றோ.க.த.க.பாடசாலை 02, தோட்டவெளி அ.த.க.பாடசாலை 02, இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை 02, சுரியகட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை 02, சென் யோசப் ம.வி. 01, எருக்கலம்பிட்டி மு.ம.வி. 01, தலைமன்னார் பியர் அ.மு.க.பாடசாலை 01, மாவிலங்கேணி றோ.க.த.க.பாடசாலை 01, நானாட்டான் ஆரம்ப பாடசாலை 01, சிலாபத்துறை அ.மு.த.பாடசாலை 01,

# எரிக்க வேண்டும் எனக்கோரும் சஞ்சீவ சமூகமளிக்காமையால்
## ஜனாஸா எரிப்புக்கெதிரான வழக்கு ஒத்திவைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கொவிட்-19 தொற்று நோயினால் மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை எரிப்பதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மனுக்கள் வியாழக்கிழமை (26) உச்ச நீதிமன்ற நீதியரசர்களான உவனக அலுவிஹாரே, சிசிர டி.ஆப்ரூ, வி.ஏ.ஜி.அமரசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கொவிட்-19 தொற்று நோயினால் உயிரிழக்கும் அனைவரினதும் உடல்கள் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் எரிக்கப்பட வேண்டும் என்று கோரி இடையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயரத்ன, தனிமைப்படுத்தலில் இருப்பதனால் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை என்ற காரணத்தை சுட்டிக்காட்டி, அவர் சார்பில் மன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே இவ்வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தொற்று அபாய சூழ்நிலை காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், புதன்கிழமையன்று (25) மின்னஞ்சல் மூலம் தாக்கல் செய்யப்பட்ட விசேட நகர்த்தல் பத்திரங்களை ஏற்றுக்கொண்டு, மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளை விசேடமாக முன்னெடுப்பதற்கு உச்ச நீதிமன்றம் தீர்மானத்ததற்கமைவாக இன்று இம்மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், நிஸாம் காரியப்பர், பைஸர் முஸ்தபா, விரான் கொரயா மற்றும் என்.எம்.சஹீட் போன்ற சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

கொவிட்-19 தொற்று நோயினால் மரணிப்போரின் உடல்கள் எரிக்கப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சரினால் வெளியிடப்பட்டிருக்கின்ற வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டு, எரிப்பு நடவடிக்கைக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் எனக் கோரி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா உள்ளிட்ட பல தரப்பினராலும் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், பல மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. கடந்த ஜூன் மாதம் 08ஆம் திகதியும் ஜுலை மாதம் 13ஆம் திகதியும் இம்மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டிருந்தன. எனினும் இதுவரை தீர்ப்பு அறிவிக்கப்படவில்லை.

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுகின்ற விவகாரத்தினால் முஸ்லிம்கள் பெரும் துயரத்தில் மூழ்கியுள்ள சூழ்நிலையில், ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதிக்குமாறு பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வருகின்ற நிலையில், இன்று வியாழக்கிழமை உச்ச நீதிமன்ற விசாரணைகளின்போது, சுகாதார அமைச்சின் இணக்கப்பாட்டுடன் சட்டமா அதிபர் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காவிடின் சாதகமான தீர்ப்பு கிடைக்கலாம் என்ற பெரும் எதிர்பார்ப்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மண்வாசனை அமைப்பினால் பாதிக்கப்பட்ட
## மக்களுக்கு உலருணவு நிவாரணம்



(காரைதீவு சகா)

கனடா மண்வாசனை அமைப்பின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் யுத்தத்தாலும் கொரோனாவாலும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது.

மண்வாசனை அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதியும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் பிரதேசம் பிரதேசமாகச் சென்று இவ் உலருணவுப்பொதிகளை வழங்கிவருகிறார்.

முதற்கட்டமாக நாவிதன்வெளிப்பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய ஏழாம் கிராமம் தமிழ்நாடு போன்ற கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்கு நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

அச்சமயம் அப்பகுதி அதிபர் எஸ்.இராகோபால் சமூகசெயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் உடன்சென்று அவற்றை வழங்கிவைத்தனர்.

தொடர்ச்சியாக மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவருகிறது.

யுத்தத்தாலும் இதரகாரணிகளாலும் மோசமாகப்பாதிக்கப்பட்ட மக்கள் சமகால கொரோனா அச்சுறுத்தலால் மிகமோசமாகப்பாதிக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இந்நிவாரணம் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

LK Newspapers
BTamil.com

10,000+ அங்கத்தவர்கள்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது

Facebook இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

